**சிஆர்எம்பி எண்.2215/2024** நாள்: 14.06.2024

மனுதாரர் - அமுதாதேவி, க/பெ.சவரிமுத்து

**சத்திய பிரமாண வாக்குமூலம்:**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. எதிர்மனுதாரர் சவரிமுத்து எனது கணவர். எதிர்மனுதாரர் தற்போது தெற்கு செய்யானேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறார். கடந்த 18.11.2022ம் தேதி எனக்கும், எனது குழந்தைகள் விஜயராஜ் மற்றும் விண்ணரசி ஆகியோர்களுக்கு மாதம் ரூ.4000/- ஜீவனாம்சம் கொடுக்க சொல்லி நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனக்கு நீதிமன்ற உத்தரவிற்கிணங்க தற்போது வரை ஜீவனாம்சம் எதிர்மனுதாரர் கொடுக்கவில்லை. நான் நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்மனுதாரர் வீட்டிற்கு நானும், என் குழந்தைகளும் வசிப்பதற்காக சென்றோம். அப்போது அவர் இங்கு எதற்கு வருகிறீர்கள் என்று சொல்லி எங்களை வீட்டிற்குள் விடாமல் விரட்டிவிட்டார். எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தால் டிவிசி எண்.3/2018 பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு வழக்கு தாக்கல் செய்த தேதியில் இருந்து தீர்ப்பு தேதியான 04.11.2023ம் தேதி வரை ரூ.2,68,000/- 67 மாதங்களுக்கு செலுத்த வேண்டும். ஆனால் தற்போது வரை செலுத்தவில்லை. நீதிமன்ற உத்தரவிற்கிணங்க எதிர்மனுதாரர் நடக்கவிலலை. எனவே என்னை நீதிமன்ற உத்தரவிற்கிணங்க தெற்கு செய்யானேந்தல் கிராமத்தில் வசிப்பதற்கு உத்தரவிட்டும், எதிர்மனுதாரருக்கு தக்க தண்டனை வழங்கியும் எதிர்மனுதாரர் எங்களுக்கு கொடுக்க வேண்டிய ஜீவனாம்ச தொகையை கொடுக்க உத்தரவிடுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.